ஒரத்தநாட்டில் காப்புக் காடுகளோ, மலைகளோ, வளம் குன்றிய வனப் பகுதிகளோ ஏதும் இல்லாத காரணத்தினால், தனியாக வனச் சரக அலுவலகம் செயல்படுத்தக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 109, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். காந்தி, மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

109—

மேம்பாலம்

***2254—திரு. ஆர். காந்தி:**

மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ராணிப்பேட்டை தொகுதி, வாலாஜா நகராட்சியில் வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து பெண்கள் உயர்நிலைப் பள்ளி வரை மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை தொகுதி, வாலாஜா நகராட்சி, வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து பெண்கள் உயர்நிலைப் பள்ளி வரையுள்ள சாலையில் மேம்பாலம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். காந்தி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தரராஜ் அவர்கள்.*

திரு. ஆர். சுந்தரராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். இவ்வுலகத்தை ஆளுகின்ற ஆற்றல் பெற்றிருக்கும், இந்தியத் திருநாட்டின் ஒரே வழிகாட்டி, வாழும் மனித தெய்வம் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழினத்தைக் காத்து நிற்கும் தமிழர் குல சாமி, கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், தமிழகத்தின் நிரந்தர முதலமைச்சர் மகத்தில் பிறந்து ஜகத்தை ஆளும் நம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) 'மக்களால் நான், மக்களுக்காக நான்' என்று சொன்னவர் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) எனக்கு முகவரி தந்த மூகாம்பிகை நம் மாண்புமிகு அம்மா; சரித்திர சாதனை வெற்றி; தொடர்ந்து இரண்டாவது முறையாக வெற்றி பெற்று, ஆறாவது முறையாக அரியணை ஏறி, தமிழகத்தை நிரந்தரமாக ஆளப்போகும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசையை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாமன்றத்திலே பேச வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆன்றோர்களும், சான்றோர்களும் வீற்றிருக்கின்ற இந்த அவையிலே எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கும் மீண்டும் ஒருமுறை நன்றியைக் கூறிக்கொள்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, எனக்கு வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கும் நான் இந்த நேரத்திலே நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.*

முற்பகல் 10-05

ஒட்டப்பிடாரம் தொகுதி, தேசிய நெடுஞ்சாலையில், தூத்துக்குடி-திருநெல்வேலி வழியாகச் செல்லும் குறுக்குச் சாலையின் அருகே ஒரு மேம்பாலம் அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

TRUTH ALONE TRIUMPHS

2016 ஆகஸ்ட் 29]

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் ஒவ்வோராண்டும் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேம்பாலப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, அவை நிறைவேற்றப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியை, தேசிய நெடுஞ்சாலைப் பகுதி என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். ஆகவே, இதை ஆய்வு செய்து, அங்கே பாலம் கட்டுகின்ற அவசியம் ஏற்படுகின்றபட்சத்தில், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்குக் கருத்துரு அனுப்பி அங்கே பாலம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள்.*

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புனிதப் பாதங்களை வணங்குகிறேன். கோயம்புத்தூரிலிருந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஊரான சேலம் செல்கிற நான்கு வழிச் சாலையிலே பெருந்துறையினுடைய மையப் பகுதியிலே, கடந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் மைனாரிட்டி ஆட்சிக் காலத்தில் நான்கு வழிச் சாலையை அமைக்கின்றபோது, நகரில் காணப்படும் அதிகமான போக்குவரத்து, மக்கள் நெருக்கம் அதிகமாக இருக்கிற பாதைகளைக் கடக்கக்கூடிய முக்கியமான சந்திப்பிலே ஒரு மேம்பாலத்தை அமைக்கத் தவறிவிட்டார்கள். ஆகவே, அந்த முக்கியமான சாலை சந்திப்பிலே மக்கள் கடந்து செல்கிறபோது, பல்வேறு விபத்துகள் ஏற்படுகின்றன; உயிரிழப்புகளும் ஏற்படுவதற்குக் காரணமாக இருக்கிறது. ஆகவே, அந்த விபத்துகள் மற்றும் உயிரிழப்புகளைத் தவிர்க்கும்பொருட்டு, மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள், பெருந்துறையின் மையப் பகுதியிலே ஒரு மேம்பாலம் அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தப் பகுதி இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் பராமரிக்கப்படுகின்ற சாலையாகும். அது மாநில நெடுஞ்சாலைத் துறையால் பராமரிக்கப்படுகின்ற சாலை அல்ல. ஆகவே, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம்தான் அந்தப் பாலத்தைக் கட்ட வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே இருக்கின்ற போக்குவரத்து நெரிசலை சுட்டிக்காட்டியதோடு, அங்கே அடிக்கடி விபத்துகள் ஏற்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தை வலியுறுத்தி எதிர்காலத்தில் அந்தப் பாலத்தைக் கட்டுவதற்குண்டான நடவடிக்கையை எடுப்பதற்கு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முயற்சி மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா அவர்கள்.*

திருமதி ம. கீதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை மக்களின் வாழ்வில் இன்பம் பொங்கிட, இன்னல்படும் மக்களின் துயர் தீர்த்திட, விவசாய மக்களின் வினைகள் தீர்த்திட, ஒட்டுமொத்தத் தமிழ் மக்களின் நலம், வளம் காத்திட கழக நிரந்தரப் பொதுச் செயலாளர், கோடானு கோடி தமிழர்களின் தாய், தமிழ்நாட்டின் நிரந்தர முதல்வர், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி எங்கள் அம்மா! தங்களின் 'பூ' பாதம் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாந்தோணி ஒன்றியம், உப்பிடமங்கலம் முதல் ஜெகதாபி வரை செல்லும் சாலையில் உள்ள இரண்டு சறுக்குப் பாலங்களை இரவு நேரங்களில் வாகனங்களில் செல்லும்போது ஏற்படும் விபத்தினைத்

தடுக்கும் வகையில் சிறிய உயர்மட்டப் பாலமாக மாற்ற வேண்டும். இப்பாலத்தை அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10-10

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியிலே போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்றது என்றும், அங்கே ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள பாலம் குறுகலாக இருக்கின்றது என்றும், அதை விரிவுபடுத்தி, புதிய உயர்மட்டப் பாலமாகக் கட்ட வேண்டுமென்றும் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல ஒவ்வோராண்டும் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு பாலப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. நபார்டு வங்கித் திட்டத்தின் உதவியுடன் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, இந்த ஆண்டும் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு பாலப் பணிகளை எடுத்துள்ளது. கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் 474 பாலங்களைக் கட்டுவதற்கு பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, 319 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அதுபோல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள அந்தப் பகுதியையும் ஆய்வு செய்து, அங்கே அதிகப் போக்குவரத்து நெரிசல் இருக்கும்பட்சத்தில், நிதிநிலைக்கேற்ப உயர்மட்டப் பாலம் கட்ட அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.*

திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவடி சட்டமன்றத் தொகுதியில் மூன்று முக்கிய இரயில்வே கடவுப் பாதைகளில் இரயில்வே மேம்பாலங்கள்*

அமைக்கப்பட வேண்டும். குறிப்பாக சென்னை-திருவள்ளூர் சாலை, பட்டாபிராம் பகுதியிலுள்ள L.C. 2 இரயில்வே மேம்பாலம், சேக்காடு பகுதி L.C. 9 மற்றும் நேரு பஜாரிலுள்ள இரயில்வே கடவு மேம்பாலம் ஆகிய மூன்று மேம்பாலங்களும் அத்தொகுதி மக்களுடைய வெகுநாளைய கோரிக்கையாக உள்ளது. இந்த மூன்று மேம்பாலங்களும் அமைத்துத் தரப்படுமா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் கிட்டத்தட்ட 73 இரயில்வே மேம்பாலங்களைக் கட்டுவதற்கு ஆணையிட்டு, அவை பல்வேறு நிலைகளில் இருந்து கொண்டிருக்கின்றன. இன்றைக்கு ஒரு இரயில்வே மேம்பாலம் கட்ட வேண்டுமென்றால், அந்த இரயில்வே கடவைக் கடந்து செல்கின்ற இரயில்களின் எண்ணிக்கை, இரயில்கள் செல்கின்ற நேரத்தில் கடவுகள் மூடப்படுகின்றபோது 24 மணி நேரத்தில் இருபுறமும் நிற்கின்ற வாகனங்களின் எண்ணிக்கை ஆகியவற்றைக் கணக்கிட்டு, அதற்கு ஒரு குறிப்பிட்ட புள்ளிகளைக் கொடுத்து, அப்புள்ளிகள் ஒரு இலட்சம் இரயில்வே அலகுகள் என இருந்தால், அங்கே இரயில்வே மேம்பாலம் அல்லது கீழ்ப்பாலம் அமைக்கக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற பகுதியில், மாநில அரசும் மத்திய அரசும் சேர்ந்து ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு, அதைக் கணக்கெடுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள பகுதிகளில் ஆய்வு செய்து, அந்த ஆய்விலே ஒரு இலட்சம் இரயில்வே அலகுகளுக்குமேல் இருக்கின்றபட்சத்தில், அங்கே உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு எதிர்காலத்திலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2016 ஆகஸ்ட் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். திருவள்ளூர் சாலை, காஞ்சிபுரம் சாலை, திருத்தணி சாலை, சோளிங்கர் சாலை, ஓச்சேரி சாலை ஆகிய ஐந்து மாநிலச் சாலைகளை இணைக்கின்ற இடமாக அரக்கோணம் நகரம் இருந்து வருகின்றது. இந்த மாநிலச் சாலைகளிலிருந்து வருகின்ற வாகனங்கள் அனைத்தும் நகரத்திற்குள் வந்துதான் செல்ல வேண்டும். ஆகவே, தினந்தோறும் நகர மக்கள் போக்குவரத்து நெரிசலிலே சிக்கித் தவிக்கிறார்கள். ஆகவே, அரக்கோணம் நகரத்திற்கு ஒரு புறவழிச் சாலை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரக்கோணத்திற்கு புறவழிச் சாலை வேண்டுமென்ற கோரிக்கையை வைத்துள்ளார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஒவ்வோராண்டும் ஒரு குறிப்பிட்ட நகரத்தையோ, பேரூராட்சியையோ எடுத்துக்கொண்டு, புறவழிச் சாலைகளை அமைத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள அரக்கோணத்தில் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அந்த ஆய்வில் அதிகமான வாகனச் செறிவு இருக்கின்றபட்சத்தில், நிதிநிலைக்கேற்ப புறவழிச் சாலை அமைப்பதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 110, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.